தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண். 64/ந/2024

நாள். 23.01.2025

திரு.E.கந்தசாமி,
காளையார்கோவில்,
சிவகங்கை மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையாளர்,
சிவகங்கை நகராட்சி,
சிவகங்கை, சிவகங்கை மாவட்டம். – எதிர்மனுதாரர்

சிவகங்கை மாவட்டம், காளையார் கோவில் தாலுகா, பருத்திக்கண்மாய், என்கிற முகவரியில் வசிக்கும் திரு.E.கந்தசாமி என்பவரின் 10.05.2024 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 13.05.2024 அன்று பெறப்பட்டு, 64/ந/2024 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

சிவகங்கை மாவட்டம், காளையார் கோவில் தாலுகா, பருத்திக்கண்மாய், என்கிற முகவரியில் வசிக்கும் திரு.E.கந்தசாமி என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்.

“ நான் கடநத 30.06.2023ம் ஆண்டு சிவகங்கை நகராட்சிக்கு உட்பட்ட தெருக்களில் தார்சாலை அமைக்கும் பணிகளை ஆன்லையன் டெண்டரில் கலந்து கொண்டு, 3 பணிகளுக்கான டெண்டர் கிடைத்தது. வேலை செய்ய உத்தரவு நகல் அளித்து உரிய காலத்திற்குள் பணிகளை செய்து முடித்து முடித்து உள்ளேன். பல மாதங்களாக காசோலை வழங்காமல் காலதாமதம் செய்து வந்தனர். ஆணையாளர் அலுவலக மேலாளருக்கு 5% வீதமும் நகர்மன்ற தலைவருக்கு 10% வீதமும் கொடுத்தால் தான் பணத்தை கொடுக்க முடியும் என்று ஆணையாளர் கூறினார். இது

குறித்து மாவட்ட ஆட்சியர் மற்றும் நகராட்சி அலுவலருக்கு பலமுறை மனு கொடுத்ததால் எனக்கு வழங்க வேண்டிய காசோலையில் பாதி தொகை விடுவிக்கப்பட்டது. இன்னும் பாதி நிலுவை தொகை சுமார் 17 லட்சத்திற்கு மேல் இன்னும் எனக்கு வழங்காமல் காலதாமதம் செய்து வருகின்றனர். தற்போது உள்ள ஆணையர் கிருஷ்ணாராமிடம் கேட்டதற்கு நகர்மன்ற தலைவருக்கு 10% கொடுத்தால் தான் காசோலை விடுவிக்க முடியும், அதுவரை ஏதாவது காரணங்கள் சொல்லி காலதாமதம் செய்து கொண்டுதான் இருப்போம் என கூறினார். இதுபற்றி பலமுறை மாவட்ட ஆட்சியரிடமும் மனு அளித்தும் இதுவரை எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை.

ஆகவே ஆவணங்கள் அடிப்படையில் விசாரணை செய்து எனக்கு பல மாதங்களாக மன உளைச்சல் பணவிரயத்தை ஏற்படுத்திய ஆணையாளர், மேலாளர், கணக்காயர் ஆகியோர் மீது நடவடிக்கை எடுக்குமாறும் எனக்கு வழங்க வேண்டிய தொகையை வழங்க நடவடிக்கை எடுக்குமாறும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 30.07.2024 நாளிட்ட அறிவிப்பு மூலம் சிவகங்கை நகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

3) சிவகங்கை நகராட்சி ஆணையர் தனது 06.12.2024 நாளிட்ட கடிதத்தில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்:–

சிவகங்கை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத்திட்டம் 2022–23ன் கீழ் குண்டூரணி புணரமைக்கும் பணி, நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டுத்திட்டம் 2022–23ன் கீழ் சேதமடைந்த தார்சாலைகளை சீரமைக்கும் பணி மற்றும் நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டுத்திட்டம் 2023–24ன் கீழ் சேதமடைந்த தார்சாலைகள் சீரமைக்கும் பணி என மூன்று பணிகளுக்கு பட்டியல் தொகை வழங்கவில்லை என திரு.இ.கந்தசாமி, ஒப்பந்ததாரர் என்பவரால் மனு செய்யப்பட்டுள்ளது.

மேற்காணும் மூன்று பணிகளுக்கும் பணி முழுமையாக முடிக்கப்பட்டதற்கு 5% தொகை ஒப்பந்தப்புள்ளிக்கு செலுத்திய 1% ஆகியவைகள் பிடித்தம் செய்யப்பட்டுள்ளன எனவும், தணிக்கை நடைபெற்ற பின்பு அவை வழங்கப்படும் என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது" என தெரிவித்துள்ளார்.

4) மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான சிவகங்கை நகராட்சி ஆணையரையும் 10.12.2024 அன்று நடைபெற உள்ள விசாரணையில் ஆஜராகும்படி இம்முறைமன்ற நடுவத்தின் 28.11.2024 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5) மனுதாரர் திரு.E.கந்தசாமி 10.12.2024 அன்றைய விசாரணையில் இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜராகவில்லை.

6) எதிர்மனுதாரரான சிவகங்கை நகராட்சி ஆணையர் 10.12.2024 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை இம்முறைமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

மனுதாரருக்கு செய்து முடித்த பணிகளுக்கான தொகை நகராட்சியினரால் பரிசீலிக்கப்பட்டு, உரிய ஒப்புதல்கள் பெறப்பட்டு, மனுதாரருக்கு அவ்வப்போது தொகைகள் வழங்கப்பட்டு உள்ளன. நகராட்சி மூலம் மனுதாரருக்கு வழங்கப்பட்ட தொகை போக மீதம் ரூ.10,01,808/– மட்டும் உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறையின் தணிக்கை முடிந்தவுடன் எழுப்பப்படும் தணிக்கை தடையாணை அடிப்படையில், மனுதாரருக்கு வழங்கப்பட்டு விடும் என தெரிவித்துக்கொள்கிறேன்.

கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத்திட்டம் (2022–23) (KNMT)–ன் கீழ் சிவகங்கை நகராட்சிக்குட்பட்ட குண்டுரேணியினை புணரமைக்கும் பணிக்கு திரு.கந்தசாமி, ஒப்பந்ததாரர் அவர்களால் சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வு நீதிப்பேராணை எண்.W.P.(MD) No.20595-2023 மூலம் வழக்கு தொடுக்கப்பட்டு மேற்காணும் நீதிப்பேராணையின் மூலம் மனுதாரருக்கு வழங்கப்பட வேண்டிய தொகையுடன் 6% சேர்த்து மனுதாரருக்கு வழங்குமாறு உத்தரவு பெறப்பட்டுள்ளது.

மேலும் திரு.கந்தசாமி அவர்களால் இது குறித்த நீதிமன்ற அவமதிப்பு வழக்கானது (Cont.P.(MD) No.2640/2023 மூலம் வழக்கு தொடுக்கப்பட்டது. இதனை எதிர்த்து சிவகங்கை நகராட்சி சார்பாக மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வில் (W.A. (MD) No.483/2024 மூலம் நீதிமன்ற மேல்முறையீடு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மேலும் மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வில் நீதிமன்ற உத்தரவின்படி (MP) (MD) No.3901/2024 & W.A.(MD) No. 483/2024 நாள். 29.10.2024 உத்தரவு இடைக்கால தடையாணை (Interim stay) வழங்கப்பட்டு, மேற்கண்ட வழக்கு நிலுவையில் உள்ளது.

மேலும் திரு.கந்தசாமி, ஒப்பந்ததாரர்அவர்களால் தொடுக்கப்பட்ட நீதிமன்ற அவமதிப்பு வழக்கானது மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் மூலம் (Cont.P.(MD) No.2640/2023 (WP) (MD) No.20595/2023–ல் நீதிமன்ற அவமதிப்பு வழக்கானது தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என தெரிவித்துள்ளார்.

7)மனுதாரரின் புகார் மனு, மற்றும் சிவகங்கை நகராட்சி ஆணையரின் விளக்க அறிக்கை மற்றும் அவரது வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

சிவகங்கை நகராட்சி ஆணையரின் வாக்குமூலத்தில் மனுதாரருக்கு செய்து முடித்த பணிகளுக்கான தொகை நகராட்சியினரால் பரிசீலிக்கப்பட்டு, உரிய ஒப்புதல்கள் பெறப்பட்டு, மனுதாரருக்கு அவ்வப்போது தொகைகள் வழங்கப்பட்டு உள்ளதாகவும், நகராட்சி மூலம் மனுதாாருக்கு வழங்கப்பட்ட தொகை போக மீதம் ரூ.10,01,808/– மட்டும் உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறையின் தணிக்கை முடிந்தவுடன் எழுப்பப்படும் தணிக்கை தடையாணை அடிப்படையில், மனுதாரருக்கு வழங்கப்பட்டு விடும் என தெரிவித்து அதற்கான விவரத்தினை கீழ்க்கண்டவாறு இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

| திட்டப்பணி விவரம் | பணி செய்து முடிக்கப்பட்ட வேலையின் மதிப்பு ரூ. | தொகை வழங்கப்பட்ட தேதி | வழங்கப்பட்ட தொகை ரூ. | வழங்கப்பட வேண்டிய தொகை | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | தணிக்கைக்காக பிடித்தம் செய்யப்பட்ட தொகை(5%) ரூ. | ஒப்பந்தப்புள்ளி வைப்புத்தொகை 1% ரூ. | கூடுதல் வைப்புத் தொகை 1% ரூ. | மொத்தம் ரூ. |
| கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத்திட்டம் 2022–23. சிவகங்கை நகராட்சிக்குட்பட்ட குண்டூரணி புணரமைக்கும் பணி | 2625741.00 | 24.03.2023 | 7,91,358.00 | 1,31 ,288.00 | 35,000.00 | 35,000.00 | 2,01,288.00 |
| | | 18.04.2023 | 7,28,553.00 | | | | |
| | | 25.08.2023 | 6, 19, 512.00 | | | | |
| | | 13.06.2024 | 2,62,574.00 | | | | |
| | | Total | 24,01,997.00 | | | | |
| நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டுத்திட்டம் 2022–23. சிவகங்கை நகராட்சிக்குட்பட்ட வார்டு 01,02,03,07,11,12 மற்றும் 14–ல் தார்சாலைகள் சீரமைக்கும் பணி | 68,49,017.00 | 07.03.2024 | 11,45,000.00 | 3,42,451.00 | 68,500.00 | 68,500.00 | 4,79,451.00 |
| | | 15.03.2024 | 40,82,152.00 | | | | |
| | | 21.05.2024 | 6,85,000.00 | | | | |
| | | 18.09.2024 | 3,42,500.00 | | | | |
| | | Total | 62.54.652.00 | | | | |
| நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டுத்திட்டம் 2022–23. சிவகங்கை நகராட்சிக்குட்பட்ட வார்டு 02–ல் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உட்புற சாலையினை சீரமைக்கும் பணி | 45,81,386.00.00 | 12.12.2023 | 20,91,316.00 | 2,29,069.00 | 46,000.00 | 46,000.00 | 3,21,069.00 |
| | | 31.01.2024 | 14,01,317.00 | | | | |
| | | 21.05.2024 | 4,60,000.00 | | | | |
| | | 18.09.2024 | 2,30,000.00 | | | | |
| | | Total | 41,82,633.00 | | | | |
| **Grand Total** | **1.40.56.144.00** | | **1,28,39,282.00** | **7,02,808.00** | **1,49,500.00** | **1,49,500.00** | **10,01,808.00** |

இந்நேர்வில், சிவகங்கை நகராட்சி ஆணையர் தனது நேரடி விசாரணையில்அளித்த வாக்குமூலத்தில் வழக்கு நிலுவையில் உள்ளதாக தெரிவித்து மாண்பமை மதுரை நீதிமன்றத்தின் நகலினை சமாப்பித்துள்ளார்.

2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் பிரிவு 10(3) (b) ன்படி நீதிமன்றம் ஒன்றின் முன் நிலுவையில் உள்ள பொருட்பாடு எதனையும் இம்முறைமன்ற நடுவம் விசாரித்தலாகாது என கீழ்க்கண்டவாறு வரையறுக்கப்பட்டுள்ளது.

Sec. 10 (3) The Ombudsman shall not enquire into matters relating to

(a) Xxxxx

(b) Any matter in respect of which an enquiry has been ordered under the Commission of Inquirieis Act 1962 or any matter pending before a Court.

மேற்காணும் சூழ்நிலையில், 2014–ம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் பிரிவு 10 (3) (b)-ன்படி, நீதிமன்றம் ஒன்றின் முன் நிலுவையில் உள்ள பொருட்பாடு எதனையும் இம்முறைமன்ற நடுவம் விசாரித்தலாகாது என்பதால், இப்பொருள் தொடர்பான மேல் நடவடிக்கையை இத்துடன் முடித்து வைக்கலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2025ஆம் ஆண்டு, சனவரி திங்கள் 23–ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1)திரு.E.கந்தசாமி,
பெரியகளுவஞ்சி,
பருத்திக்கண்மாய் அஞ்சல்.
காளையார்கோவில் தாலுகா,
சிவகங்கை மாவட்டம்.

2)நகராட்சி ஆணையர்,
சிவகங்கை நகராட்சி,
சிவகங்கை.
சிவகங்கை மாவட்டம்.

3)நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

4)ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்

இ.கோ/உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

சட்ட ஆலோசகர்/செயலாளர்(முகூபொ)